**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 22.11.2021–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : .11.2021 இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

( 1 ) இராசிபுரம் நகராட்சியில் குடிநீர் வடிகால் நிதியின்கீழ் ஆழ்துளைக் கிணறுகளிலுள்ள சிறு மின் விசைப்பம்பு மற்றும் திறந்த வெளிக் கிணற்றிலுள்ள நீர்முழ்கி மின் மோட்டார்கள் சரி செய்யும் பணி ரூ. 8.00 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ள 11.11.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு.

1) திரு ஆர். பிரகாசம், ஒப்பந்ததாரர், மசக்காளிப்பட்டி – மதிப்பீட்டைவிட 3.42% அதிகம்
2) திரு ஆர்.எஸ்.ரங்கசாமி, ஒப்பந்ததாரர், காட்டுர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.12% குறைவு.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.12% அளித்துள்ள திரு ஆர்.எஸ்.ரங்கசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இப்பணியின் செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(3645/21/இ2)

**தீர்மானம் எண். 1157**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

( 2 ) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் டெங்கு காய்ச்சல் நடவடிக்கையாக வீட்டு தொட்டிகள், மேல்நிலை, கீழ்நிலை தொட்டிகளில் கொசுபுழுக்களை அழிக்க பயன்படுத்தப்படும் அபேட் (Temephose) மருந்து 100 லிட்டர் வாங்குவதற்கு தனி அலுவலரின் அனுமதிக்கும், உத்தேச செலவினம் ரூ. 1.00 லட்சத்திற்கும் தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் அங்கீகாரம் செய்துள்ள நிறுவனத்தில் Temephose 100 லிட்டர் வாங்குவதற்கு தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2) உத்தேச செலவினம் ரூ. 1.00 லட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(எச்1/4247/21)

**தீர்மானம் எண். 1158**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

( 3 ) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் டெங்கு நோய் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக வளர்ச்சியடைந்த கொசுக்களை அழிப்பதற்கு கீழ்கண்ட அளவுகளில் உள்ள 2 புகை மருந்து அடிக்கம் இயந்திரம் வாங்க வேண்டியுள்ளது.

Supply of Ignition coil 9V
Petrol Tank Capacity : 1 litres
Insecticide Tark Capacity : 4.5 litres
Empty weight : 11 Kg.
Length : 1475 mm., width : 280 mm. Height : 340 mm.

மேற்கண்ட அளவுகளில் 2 புகை மருந்து அடிக்கும் இயந்திரம் (Pulse Jet Engine) வாங்குவதற்கும், உத்தேச செலவினம் ரூ. 150000/–க்கும் தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) ஒப்பந்தப்புள்ளி கோரி இரண்டு புகை மருந்து அடிக்கும் இயந்திரம் (Pulse Jet Engine) வாங்குவதற்கு தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2) உத்தேச செலவினம் ரூ. 150000/– நகராட்சி பொது நிதி அல்லது திடக்கழிவு மேலாண்மை நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(எச்1/4247/21)

**தீர்மானம் எண். 1159**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(4) இராசிபுரம் நகராட்சியில் நவீன தினசரி அங்காடி அமைக்க விரிவான திட்ட அறிக்கை (DPR) மற்றும் வரைபடங்கள் தயாரிக்க ரூ. 2.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 12.11.2021–இல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் வருமாறு.

1) Smart Builders, 1/298 B1, Veerapandi, Thiruppur - Rs. 199000/-
2) S.S. Builders, 8/9, South Street, Thethuppatty, Dindugal - Rs. 205000/-

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s. Smart Builders, Thiruppur நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று, பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று M/s. Smart Builders, Thiruppur அவர்களுக்கு தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(3472/21/இ1)

**தீர்மானம் எண். 1160**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(5) இராசிபுரம் நகராட்சியில் நவீன தினசரி அங்காடி கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் திட்ட மதிப்பீடு தயாரிக்க தேவையான மண் பரிசோதனை சான்று, கட்டுமான வரைபடம் (Geotechnical Investigation மற்றும் Structural Design) தயாரித்து வழங்க கோவை தொழில்நுட்ப நிறுவன (CIT) கேட்பு வரப்பெற்றுள்ளது.

1) Geotechnical Investigation of proposed market at Rasipuram - Rs. 56000/-
2) Structural Design of proposed market at Rasipuram - Rs. 110000/-

மேற்காணும் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** திட்டப் பணிகளின் அவசியம் கருதி கோவை தொழில்நுட்ப நிறுவனத்திற்கு (CIT) வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(3472/21/இ1)

**தீர்மானம் எண். 1161**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021–22–இன்கீழ் வீட்டு வசதி வாரியத்தில் பூங்கா மற்றும் விளையாடுமிடம் ஏற்படுத்த ரூ. 48.00 இலட்சம் மதிப்பீட்டிற்கும், ரூ. 300.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப்பணிகளை மேற்க்கொள்ளவும் அரசாணை (நிலை) எண். 90, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 16.11.2021–இல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்க்காணும் அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(3707/21/இ1)

**தீர்மானம் எண். 1162**

அலுவலகக் குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது.

(7) இராசிபுரம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2021–22–இன்கீழ் 68 எண்ணிக்கையிலான 10.775 கி.மீ. சாலைப் பணிகள் மேற்க்கொள்ள ரூ. 1000.00 இலட்சத்திற்கான நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது ஆணை ந.க.எண். 24886/2021/இ1 நாள் 19.11.2021–இல் வழங்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது ஆணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(3717/21/இ1)

**தீர்மானம் எண். 1163**

மன்றம் பதிவு செய்யப்பட்டது.

(8) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான குடிநீர் லாரி TN 28 BZ 8975–க்கு புதிய மின்கலன் வாங்கும் பணிக்கு 18.11.2021 அன்று பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1) R.K. சிஸ்டம்ஸ், அண்ணாசாலை, இராசிபுரம் | – | ரூ. 7430/– |
| 2) தி பேட்டரி கேட், சேலம் ரோடு, இராசிபுரம் | – | ரூ. 7000/– |

பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள தி பேட்டரி கேட், இராசிபுரம் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(4296/21/இ2)**

**தீர்மானம் எண். 1164**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**(9)** இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான குடிநீர் லாரி TN 28 BZ 9021–ற்கு புதிய மின்கலன் வாங்கும் பணிக்கு **18.11.2021** அன்று பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1) R.K. சிஸ்டம்ஸ், அண்ணாசாலை, இராசிபுரம் | – | ரூ. 13648/– |
| 2) தி பேட்டரி கேட், சேலம் ரோடு, இராசிபுரம் | – | ரூ. 11200/– |

மேற்கண்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள தி பேட்டரி கேட், இராசிபுரம் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(4297/21/இ2)**

**தீர்மானம் எண். 1165**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– சி. கிருபாகரன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர் (கூ.பொ.),
இராசிபுரம் நகராட்சி